**செய்தி வெளியீடு எண்:389** **நாள்: 23.06.2017**

**55 கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்**

**ஜூன் 30. ல் 55 கூட்டுறவு சங்கங்களில் 573 நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கான வேட்புமனுத்தாக்கல்**

**ஜூலை 7–ல் வாக்குப்பதிவு**

**மாநில கூட்டுறவு தேர்தல் ஆணையர் அறிவிப்பு**

தமிழகத்தில் பல்வேறு அரசு துறைகளின் கீழ் புதிதாக துவங்கப்பட்ட 50 கூட்டுறவு சங்கங்கள் மற்றும் செயலாட்சியர் நிர்வாகத்தில் இருந்துவரும் 5 சங்கங்களில் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் 07.07.2017–ம் தேதி நடைபெறும் என்றும் இதற்கான வேட்புமனுத்தாக்கல் 30.06.2017 அன்று நடைபெறும் என்றும் கூட்டுறவு சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு. ம.ரா. மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:–

**55 கூட்டுறவு சங்கங்களில் 573 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் 55 தலைவர் மற்றும் 55 துணைத் தலைவர்களுக்கான தேர்தல்**

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டின் கீழ் வரும் 4 சங்கங்கள், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கட்டுப்பாட்டின்கீழ் வரும் 4 சங்கங்கள், மீன் வளத்துறை ஆணையரின் கீழ்வரும் 1 சங்கம், பால்பண்ணை அபிவிருத்தி ஆணையர் கட்டுப்பாட்டின்கீழ் வரும் 43 சங்கங்கள் மற்றும் தொழில்துறை ஆணையர் கட்டுப்பாட்டின் கீழ்வரும் 3 சங்கங்கள் ஆக மொத்தம் 55 சங்கங்களுக்கு 573 நிர்வாகக்குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கவும் மற்றும் 55 தலைவர் மற்றும் 55 துணைத்தலைவர்களை தேர்ந்தெடுக்கவும் தேர்தல் அட்டவணையை தமிழ்நாடு மாநில கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. இச்சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் **ஜூன்** 30–ம் தேதியும், வாக்குப்பதிவு **ஜூலை** 7-ம் தேதியும் நடைபெறும். தலைவர் மற்றும் துணைத்தலைவர்களுக்கான தேர்தல் **ஜூலை** 12-ம் தேதி அன்று நடைபெறும்.

இந்த 573 நிர்வாகக்குழு உறுப்பினர்களில் 107 இடங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவருக்கும், 148 இடங்கள் பெண்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான வேட்புமனுத் தாக்கல்**

நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தலுக்கான வேட்புமனுக்களை 30.06.2017 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை தாக்கல் செய்யலாம். 03.07.2017 அன்று வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு மாலை 4.00 மணி முதல் 5.00 மணிக்குள் தகுதியான வேட்பாளர் பட்டியல் தேர்தல் அலுவலரால் வெளியிடப்படும்.

## வேட்பு மனு திரும்பப்பெறுதல்

தாக்கல் செய்த வேட்புமனுவை திரும்பப் பெற விரும்புவோர் 04.07.2017 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். அன்று மாலை 5.00 மணிக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப்பட்டியல் தேர்தல் அலுவலரால் வெளியிடப்படும்.

## வாக்குப்பதிவு

போட்டி இருப்பின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தலுக்கான வாக்குப்பதிவு 07.07.2017 அன்று காலை 8.00 மணிக்குத் துவங்கி மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

## வாக்கு எண்ணிக்கை

வாக்குகள் எண்ணும் பணி 08.07.2017 அன்று காலை 10.00 மணிக்குத் துவங்கும். வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்டவுடன் முடிவுகள் அறிவிக்கப்படும்.

## தலைவர், துணைத்தலைவர் தேர்தல்

இக்கூட்டுறவு சங்கங்களின் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அறிவிப்பு 08.07.2017 அன்று வாக்கு எண்ணிக்கை முடிந்தவுடன் இதற்கான தேர்தல் அலுவலரால் வழங்கப்படும். தலைவர் மற்றும் துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 12.07.2017 அன்று காலை 10.00 மணி முதல் நடைபெறும்.

இத்தேர்தல் நடைபெறவுள்ள கூட்டுறவு சங்கங்களின் பெயர் விபரங்கள் குறித்து, அந்தந்த சங்கங்கள் தொடர்புடைய மாவட்ட தேர்தல் அலுவலரையும், மாவட்ட தேர்தல் பார்வையாளர்களான கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்களையும் தொடர்பு கொள்ளலாம். மேலும் ஆணையத்தின் வலைதளம் www.coopelection.tn.gov.in –ல் தேர்தல் நடைபெறவுள்ள கூட்டுறவு சங்கங்களின் பெயர் விபரங்களை அறிந்து கொள்ளலாம். மேற்கண்டவாறு கூட்டுறவு சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு. ம.ரா. மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**